**Dated : 23.01.2026**

**O.S.No. 46/2024**

**DW.1 – திரு. ஜெயபால்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

மொத்தமாக என்னுடைய சொத்தில் 2 கிணறுகள் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் வைத்திருக்கும் கிணறு அல்லாது என் தகப்பனார் இருந்த காலத்திலேயே ஒரு கிணறு வெட்டப்பட்டு தற்போது அந்த கிணறு உள்ளது என்றால் சரிதான், அந்த கிணறை தான் நான் தற்போது பயன்படுத்துகிறேன். ராஜாராம் தனிப்பட்ட முறையில் கிணறு வெட்டுவதற்கு முன்னால் என் தகப்பனார் வெட்டிய கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் வாய்மொழியா யார் யார் எந்தெந்த நிலத்தை பயன்படுத்த வேண்டும் என்று ஒதுக்கி கொடுத்தாரோ அந்த நிலத்தை தான் தற்போது பயன்படுத்தி வருகிறோம் என்றால் ஆளுக்கு பாதி தான் தானசெட்டில்மெண்ட், ஆளுக்கு பாதியாக தான் நாங்கள் அனுபவித்து வந்தோம். நாங்கள் நிலத்தை அளந்து சரிபாதியாக பிரித்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான், சாட்சி பின்னர் மீண்டும் கூறுகிறார் ஆளுக்கு சரிபாதியாக தான் பிரித்து அனுபவித்து வருகிறோம்.

சர்வேயரை வைத்து அளந்து பிரிப்பதற்கு ஏற்பாடு செய்த போது, அளப்பதில் தான் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் சரிவர அளக்க ஒத்துக்கொள்ளாத காரணத்தினால் தான் இந்த வழக்கே ஏற்பட்டது என்று சொன்னால் நான் பிரச்சனை ஏதும் செய்யவில்லை. ராஜாராம் தனிப்பட்ட கிணறை தகப்பனார் இறப்பிற்கு பின்னிட்டு தான் ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரிதான். இன்று வரை ராஜாராமிற்கு பூர்வீக கிணற்றிலும் பாத்தியதை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ராஜாராம் ஓசூரிலிருந்து விவசாயம் வந்த போது, நான் அவரை விவசாயம் செய்யவிடாமல் தடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல, நான் தடுக்கவில்லை. நான் தடுத்த காரணத்தினால் தான் வாதி நிலத்தை சரிசமமாக பிரித்துக்கொடுக்க இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் அவரை தடுக்கவில்லை. வாதி தாவா சொத்தினை சரிசமமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்க வேண்டும் என்று சொன்னால் சரிசமமமாக பத்திரத்தில் உள்ளவாறு ஆளுக்கு சரிசமம் தான்.

பூர்வீகமாக உள்ள கிணற்றிலும் அவருக்கு பாத்தியம் உண்டு என்று சொன்னால் சரியல்ல, அவருக்கு நான் ஏற்கனவே ஒரு தனி சர்வீஸ் உடன்

கிணறும் ரூ.1,00,000/- பணமும் கொடுத்தாகிவிட்டது, அதனால் கிணற்று பாகத்தில் அவருக்கு பங்கு கிடையாது. ரூ.1,00,000/- நான் பணம் கொடுத்ததாக சொல்கிறேன், அந்த பணத்தை நான் எப்போது கொடுத்தேன் என்றால் சுமார் 8 வருட காலங்கள் ஆகிறது. இந்த கிணற்றில் என் தம்பிக்கு பாகம் கிடையாது, அதற்காக தான் ரூ.1,00,000/- பணம் கொடுக்கப்பட்டது என்பதனை எழுத்து பூர்வமாக எழுதிக்கொண்டோமா என்றால் எழுத்து பூர்வமாக எழுதிக்கொள்ளவில்லை, வாய் வார்த்தை தான். பூர்வீக சொத்திலுள்ள கிணற்றில் உள்ள உரிமையை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் ரூ.1,00,000/- பணம் கொடுத்ததாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு இந்த வழக்கு மனுமதிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,

Krishnagiri.